*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***Crl.M.P. 1429/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PSE-2***

*Name / Father's Name:* **திரு.செல்லையா த/பெ. அம்பாயிரம்**

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10.02.2026.**

துவக்க நேரம் 03.55 A.N

**சாட்சி முன்னிலை. சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது. சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.**

1) நான் தற்பொழுது பெரியேரி கிராமத்தில் வசித்து, ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். அண்ணாதுரையின் காட்டிற்கும், பக்கத்தில் எனது காடு உள்ளது. நான், எனது காட்டில் தண்ணீர் கட்டிக்கொண்டிருந்தேன். அப்பொழுது சத்தம் கேட்டு, நான் சென்று பார்த்தேன்.

2) அந்த இடத்தில் ராஜவேலு என்பவர் தண்ணீர் செல்லும் பைப்பை எடுத்து தூக்கி எறிந்துவிட்டார். அப்பொழுது அண்ணாதுரை என் வாய்க்காலில் நீ நடக்காதே என்று ராஜவேலுவிடம் சொன்னார். அதற்கு ராஜவேலு வாய்க்காலில் நீ நடந்தால் உன்னை வெட்டுவேன் என்று ராஜவேலு, அண்ணாதுரையை பார்த்து சொன்னார்.

3) இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாய்தகராறில் ராஜவேலு, அண்ணாதுரையின் நெஞ்சில் ஓங்கி குத்திவிட்டார். ராஜவேலுவின் மனைவி கிணற்று அருகே வேலை செய்துகொண்டிருந்தவர் அங்கிருந்த வந்து, அண்ணாதுரையை பார்த்து உன்னை மம்மட்டியாலே அடித்து கொன்றுவிடுவேன் என்று சொன்னார்.

4) நான், நடந்த சம்பவம் பற்றி அண்ணாதுரையின் மகனுக்கு தொலைபேசியின் தொடர்புகொண்டு சொன்னேன். அதற்கு அவர் தலைவாசலில் இருப்பதாகவும், எனது அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லலாம் என்று சொன்னதன் பேரிலும் நானும், அண்ணாதுரையின் மகனும் அண்ணாதுரையை அழைத்துவந்து சிகிச்சைக்கு சேர்த்தோம். நடந்த சம்பவம் பற்றி தலைவாசல் காவல் நிலையத்தினர், என்னை விசாரித்தார்கள், நான் தற்பொழுது என்ன சொன்னேனோ, அதையே காவல் நிலைய போலிசாரிடமும் சொன்னேன். சம்பவயிடத்திற்கு போலிசாரை அழைத்துச்சென்று அடையாளம் காண்பித்தேன். எதிரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முடிவு நேரம் 04.00 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.02.10 16:23:00 +0530

Judicial Magistrate No.2, Attur.